# வடக்கு மாகாணக்கல்வித் திணைக்களம்

## தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை - 2024

## பயிற்சிப் பரீட்சை - 06

### வடமராட்சி கல்வி வலயம்

**EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, AUGUST 2024**

மாணவர்களைப் பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம்
வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2024

| | |
|---|---|
| வினாத்தாள்-I | |
| வினாத்தாள்-II | |
| மொத்தம் | |

## வினாத்தாள் I

1மணித்தியாலம்

சுட்டெண்.......................................................

### பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

*உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக
*மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக
*இவ் வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்குமான விடைகளை இத்தாளிலேயே எழுதுக
*ஒவ்வொரு வினாவுக்கும் மூன்று விடைகள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றில் சரியான விடையை தெரிவு செய்து அதன்கீழ் கோடிடுக
*செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

### விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்**<br>புள்ளிவழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | ...................................<br>பெயர்<br>...................................<br>ஒப்பம் |
| **இரண்டாவது பரீட்சகர்**<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன். | ...................................<br>பெயர்<br>...................................<br>ஒப்பம் |
| **மதிப்பீட்டுப்புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்**<br>மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன் | ...................................<br>பெயர்<br>...................................<br>ஒப்பம் |
| அதிபர்<br>மேற்பார்வை செய்தேன் | ................................... |
| வலய/மாகாண மேற்பார்வையாளர் | ................................... |

(பக்.2 ஐப் பார்க்க)

LMDMint



01. உரு தொடர்பான சரியான கூற்றைத் தெரிவு செய்க

(1) இது ஒரு பகல் வேளைக்குரிய காட்சியாகும்

(2) இது ஓர் இரவுக்காட்சியாகும்


(3) இருவர் தலையில் தொப்பி அணிந்துள்ளனர்

02. உரு Aஐ ஒத்த ஓர் உருவைப் பெறுவதற்கு உரு Bஇல் செய்ய வேண்டிய மாற்றங்களின் எண்ணிக்கை யாது?


(1) 3

(2) 4

(3) 5




உரு A



உரு B


03,04 ஆகிய வினாக்களில் கட்டத்தினுள் உள்ள தொகுதியுடன் சேர்ப்பதற்கு மிகப் பொருத்தமான உரு எது?

03.





(1)




(2)




(3)

04.





(1)





(2)




(3)

05. தரப்பட்ட உருவில் விடுபட்ட இடத்திற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க






(1)



(2)




(3)

சுட்டெண்:...............................................................................

06. ஒரு குறித்த மாதத்தின் முதலாம் நாள் ஒரு வெள்ளிக்கிழமையாகும். கடைசி நாள் சனிக்கிழமை ஆகும். அம்மாதத்தில் எத்தனை நாட்கள் உள்ளன?

(1) 28 (2) 30 (3) 31


07. பின்வரும் உருக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் ஒழுங்கில் அவ்வுருக்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க





A B C D

(1) BCDA
(2) CBDA
(3) ADCB

08. தரப்பட்டுள்ள கோலத்தில் உள்ள வெறுமையான கட்டத்திற்கு பொருத்தமான விடை எது



(1)  (2)  (3) 

09. கதை ஒன்றின் பகுதி கீழே தரப்பட்டுள்ளது அதிலுள்ள வெற்றிடங்களிற்குப் பொருத்தமான சொற்கள் இடம்பெறும் பகுதியைத் தெரிவு செய்க


சிட்டுக்குருவியும் தேனீயும் காட்டில் உள்ள இரு நெருங்கிய நண்பர்களாவர். ஒரு நாள் ஆற்றின் அருகே உள்ள ........................... கிளையில் இருந்த சிட்டுக்குருவி நண்பன் நீரில் அடித்துச் செல்லப்படுவதைக் கண்டது. ..................... விரைவாகச் சொண்டினால் மரத்தின் ஓர் இலையைப் பிடுங்கியது. அதனைத் ........................ அருகில் போட்டது. நீரில் போடப்பட்ட இலை மீது தேனீ ஏறிக்கொண்டது. சிறிது நேரத்தில் சிறகடித்துக்கொண்டு பறந்து சென்றது.

(1) ஒரு மரத்தின் / தேனீக்கு / சிட்டுக் குருவி




(2) கரையில் / சிட்டுக்குருவி / தேனீக்கு




(3) ஒரு மரத்தின் / சிட்டுக்குருவி / தேனீக்கு

10. உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?




(1) 5
(2) 6
(3) 8

11.  இற்கு  எனின்  இற்கு : .................................

(1)  (2)  (3) 

வெற்றிடத்தில் வரவேண்டிய விடையைத் தெரிவு செய்க

12.





(1) 2

(2) 3

(3) 1

13.




(1) 30

(2) 45

(3) 22

14. கடிதம் ஒன்றில் இடம்பெற வேண்டிய பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை ஒழுங்குபடுத்தும் போது வரும் சரியான விடையைத் தெரிவு செய்க

A- முடிப்பு B- உடல் C- முகவரியும் திகதியும் D- ஒப்பம் E- விளிப்பு

(1) CBEDA
(2) CEBAD
(3) CEBDA

15. கீழே தரப்பட்டுள்ள நெய்யரியில் கிடையாகவும் கீழ்நோக்கியும் எல்லா நிரைகளிலும் எல்லா நிரல்களிலும் A,B,C என்னும் மூன்று எழுத்துக்களும் இடப்படுமாறு அடைப்புகளை நிரப்புதல் வேண்டும். இதற்கேற்ப ? உள்ள இடத்தில் இடப்பட வேண்டிய எழுத்து யாது?

| | | |
|---|---|---|
| A | B | |
| C | | |
| B | | ? |

(1) A

(2) B

(3) C

16. கட்டத்தில் தரப்பட்ட உருக்களை கண்ணாடியில் பார்க்கும் போது தோன்றும் சரியான உருவைத் தெரிவு செய்க





(1)



(2)



(3)

LMDUnit

17. முதலில் தரப்பட்ட ஆங்கில எழுத்து ஏதோவொரு விதத்தில் எழுதப்பட்டுள்ளது. பின்வரும் ஆங்கில எழுத்துக்களில் அதே விதத்தில் எழுதப்பட்டிருக்க முடியாத விடையைத் தெரிவு செய்க

F - ꟻ ⇨ (1) C - Ɔ (2) V - V (3) M - W

18. நான்கு பறவைகள் வீதம் உள்ள மூன்று கட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| கட்டம்-1 | கட்டம்-2 | கட்டம்-3 |
|---|---|---|
| கிளி | ஆந்தை | கிளி |
| மயில் | சேவல் | மைனா |
| புறா | கொக்கு | மயில் |
| சேவல் | மயில் | புறா |


கட்டம் 1இலும் கட்டம் 2இலும் இருக்கும் ஆனால் கட்டம் 3இல் இல்லாத பறவை எது?

(1) சேவல் (2) கொக்கு (3) மயில்

19. 16படிகள் உள்ள படிக்கல்லில் A முதல் படியிலும் B 16ஆம் படியிலும் நிற்கின்றனர். A இருபடி ஏறும்போது B மூன்று படிகள் இறங்கினால் அவர்கள் இருவரும் எத்தனையாவது படியில் சந்திப்பர்?


(1) 4வது படியில் (2) 5வது படியில் (3) 7வது படியில்

20. சதுரவடிவான தாள் ஒன்று உருக்களில் உள்ளவாறு அம்புக்குறி காட்டும் முறைக்கேற்ப மடிக்கப்பட்டு இறுதியாக இரு புள்ளிக்கோடுகள் வழியே வெட்டி வேறாக்கும் போது கிடைக்கும் வடிவங்கள் தொடர்பான கூற்றுக்களில் சரியான விடையைத் தெரிவு செய்க



(1) முக்கோணத்துண்டுகள் மட்டும் கிடைக்கும்
(2) சதுரவடிவத் துண்டுகள் மட்டும் கிடைக்கும்
(3) முக்கோண, சதுரவடிவத் துண்டுகள் கிடைக்கும்

- கீழே மூன்று வட்டங்களும் யாதாயினும் ஒரு தொடர்பை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்டுள்ளன. இதனைக் கொண்டு 21, 22 ஆகிய வினாக்களுக்கான விடையைத் தெரிவு செய்க




21. பூக்கள், வெள்ளைநிறப்பூக்கள், மல்லிகை ஆகியவற்றுக்கான தொடர்பைக் காட்டும் உரு

(1) A (2) B (3) C

22. உரு B இற்குப் பொருத்தமான சொற்கள் கொண்ட விடையைத் தெரிவு செய்க

(1) தாவரங்கள், மரங்கள், வேம்பு
(2) பறவைகள், கிளி, நாய்
(3) பிராணிகள், ஊர்வன, பசு


23. ஒரு பெட்டியில் 1,2,3,4,5 ஆகிய இலக்க அட்டைகள் 10 வீதம் இடப்பட்டுள்ளன. அப்பெட்டியிலிருந்து 10 அட்டைகளை வெளியே எடுக்கும் போது அவ்அட்டைகளின் கூட்டுத்தொகைக்கு இருக்கக்கூடிய உயர்ந்தபட்சப் பெறுமானம் யாது?

(1) 50 (2) 30 (3) 100

24. அருகில் தரப்பட்டுள்ள அடைப்பினுள் உருக்களின் கூட்டுத்தொகை நிரலாகவும் நிரையாகவும் தரப்பட்டுள்ளன. இதன்படி ☆ இவ் உருவின் பெறுமானம் யாது?

| | | | |
|---|---|---|---|
| ○ | ⇨ | ⇨ | **14** |
| ☆ | ○ | △ | **13** |
| **7** | **9** | **11** | |

(1) 4 (2) 3 (3) 5

25. 


உருவில் தூரம் கூடிய பாதையைத் தெரிவு செய்க

(1) A இலிருந்து B வரையுள்ள பாதை
(2) C இலிருந்து D வரையுள்ள பாதை
(3) E இலிருந்து F வரையுள்ள பாதை

26. சுவர்ணவி,தநிஷ்க்கா,டர்வின் ஆகியோரிடம் பின்வரும் நாணயத்தாள்கள் ஐந்துவீதம் உள்ளன.



சுவர்ணவி



தநிஷ்க்கா




டர்வின்

மூன்று பேரும் தாம் வைத்திருந்த நாணயங்களில் இவ்விரண்டை ஏனையோருக்குப் பரிமாறிக் கொண்டனர். அவ்வாறு பரிமாறிய பின்னர் கூடுதலான பெறுமதி கொண்ட பணத்தை வைத்திருப்பவர் யார்?

(1) சுவர்ணவி (2) தநிஷ்க்கா (3) டர்வின்

27. கீழே தரப்பட்ட உருக்களில் தடித்த கோட்டினால் வரையப்பட்ட உருக்களில் உள்ள சிறிய கட்டங்களின் மொத்த எண்ணிக்கை யாது?




(1) 9 முழுக்கட்டங்களும் 1 அரைக்கட்டமும்
(2) 10 முழுக்கட்டங்கள்
(3) 8 முழுக்கட்டங்கள்

28. அனுதியா நூலகத்திற்குச் சென்று மு.ப 9.00மணி தொடக்கம் மு.ப 9.45மணி வரையும், பவித்திரா மு.ப 9.30மணி தொடக்கம் மு.ப 10.00மணி வரையும், சாத்மீகா மு.ப 9.40மணி தொடக்கம் மு.ப 10.45மணி வரையும் நூல்கள் வாசித்தனர். எனவே மூவரும் நூலகத்தில் எவ்வளவு நேரம் ஒன்றாக இருந்து நூல்களை வாசித்தனர்?


(1) 5நிமிடம்
(2) 45நிமிடம்
(3) 30நிமிடம்

பெரிய கனவுருக்குற்றி ஒன்றினைச்சுற்றி எல்லாப் பக்கமும் வர்ணம் பூசப்பட்டு படத்தில் காட்டியவாறு கோடுகள் வழியே வெட்டி எடுக்கப்பட்டுள்ளது எனின்




29. ஒரு பக்கம் வர்ணம் பூசப்பட்ட சிறிய தாயக்கட்டைகள் எத்தனை உள்ளன?
    (1) 10 (2) 8 (3) 12

30. இரண்டு பக்கங்கள் வர்ணம் பூசப்பட்ட தாயக்கட்டைகள் எத்தனை உள்ளன?
    (1) 6
    (2) 12
    (3) 16

31. 


உரு 1




உரு 2


உரு 1இல் உள்ளவாறு இரு நூல்துண்டுகளையும் இரண்டாக மடித்து உரு 2இல் காட்டியவாறு நடுவே வெட்டும் போது கிடைக்கும் நூல்துண்டுகளின் எண்ணிக்கை யாது?
    (1) 8 (2) 4 (3) 6


32. பாட்டிக்கும் பாட்டனுக்கும் 5 மகள்மார் உள்ளனர். அவர்கள் ஐவரும் திருமணமாகியுள்ளனர். அவ் ஐந்து குடும்பங்களிலும் ஐந்து பிள்ளைகள் வீதம் உள்ளனர். அவர்கள் எல்லோரும் உயிர்வாழ்கின்றனர். எனவே இக்குழாத்தில் எத்தனை நபர்கள் உள்ளனர்?
    (1) 40 (2) 37 (3) 42

33. 

இவ் உருவை முழுமையாக நிறந்தீட்ட வேண்டும். அருகருகே ஒரே நிறம் அமையாதவாறு நிறந்தீட்டுவதற்கு ஆகக்குறைந்தது எத்தனை நிறங்களைப் பயன்படுத்த முடியும்?
    (1) 2
    (2) 3
    (3) 4


34. 

இவ் உருவில் இருந்து  இவ்வாறான எத்தனை வெவ்வேறு அமைவுகளை உள்ளன?
    (1) 4 (2) 8 (3)7

35. 

தரப்பட்ட கணிதச் செய்கைக்கான தொடர்பை விளங்கி வெற்றிடத்தில் வரவேண்டிய விடையைத் தெரிவு செய்க
    (1) 4
    (2) 6
    (3) 8

36. நீரின் வெவ்வேறு கனவளவுகள் உள்ள மூன்று ஒத்த பாத்திரங்கள் கீழே தரப்பட்டுள்ளன




மூன்று பாத்திரங்களிலும் உள்ள நீரின் கனவளவுகளைச் சமப்படுத்துவதற்குப் பின்பற்றத்தக்க விரைவானதும் இலகுவானதுமான நடைமுறை யாது?

(1) பாத்திரம் A இலிருந்து பாத்திரம் C இற்கு நீரை இட்டு இரு பாத்திரங்களிலும் உள்ள நீர்க்கனவளவுகளைச் சமப்படுத்துதல்

(2) பாத்திரம் C இன் நீர்க்கனவளவுக்குச் சமனாக இருக்குமாறு A,B ஆகிய பாத்திரங்களிலிருந்து நீரை வெளியேற்றல்

(3) மூன்று பாத்திரங்களிலும் உள்ள நீரை ஒரு பெரிய பாத்திரத்தில் இட்டு மறுபடியும் A,B,C ஆகிய மூன்று பாத்திரங்களிலும் சமமாக இடுதல்


37. சிவப்பு, நீலம், கறுப்பு நிறங்கள் கொண்ட மூன்று பேனாக்கள் உள்ளன. அவற்றை ஸதுர்சிகா, காவியா, கனிமொழி ஆகியோரிடையே பகிர்ந்து கொள்ளத்தக்க ஒன்றிலிருந்தொன்று வேறுபட்ட விதங்கள் எத்தனை உள்ளன?

(1) 3 (2) 6 (3) 4


38. ஒரு பணப்பையில் ரூ100, ரூ500, ரூ1000 கொண்ட 8 நாணயத்தாள்கள் உள்ளன. அவற்றில் ரூ500 நாணயத்தாள்களின் எண்ணிக்கையும் ரூ1000 நாணயத்தாள்களின் எண்ணிக்கையும் சமம். பணப்பையில் இருக்கக்கூடிய கூடுதலான பணம் யாது?

(1) ரூ.2100 (2) ரூ. 4700 (3) ரூ. 5000

39. கீழே தரப்பட்ட வெட்டுருவை மூடி ஒட்டுவதன் மூலம் பெறப்படும் திண்ம உருவைத் தெரிவு செய்க



(1) (2) (3)

40. 


உருவில் வட்டவடிவ ஓட்டப்பாதை காட்டப்பட்டுள்ளது. திவி, **ஷகிப்** ஆகிய இருவரும் A என்ற இடத்திலிருந்து ஒரேநேரத்தில் புறப்பட்டு அம்புக்குறி காட்டும் திசைவழியே ஓடுகின்றனர். திவியின் கதி **ஷகிப்**பின் கதியின் இருமடங்காகும். திவி Dஇற்கு வரும்போது **ஷகிப்** வருவது

(1) Bஇற்கும் Cஇற்கும் இடையில்

(2) Aஇற்கும் Bஇற்கும் இடையில்

(3) Cஇற்கும் Dஇற்கும் இடையில்

$(40 \times 2\frac{1}{2} = 100$ புள்ளிகள்$)$

வடக்கு மாகாணக்கல்வித் திணைக்களம்

தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை - 2024

# பயிற்சிப் பரீட்சை – 06

**வடமராட்சி கல்வி வலயம்**

**EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, AUGUST 2024**

மாணவர்களைப் பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2024

## வினாத்தாள் II

1மணி 15 நிமிடங்கள்

வினாத்தாள்-II புள்ளிகள்

சுட்டெண்.......................................................

### பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

*உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக
*மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக
*எல்லா வினாக்களுக்கும் உரியவிடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக
*மூன்றுவிடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையை தெரிவு செய்து அதன்கீழ் கோடிடுக
*செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

● இவ் வினாத்தாளைப் போட்டோப்பிரதி செய்தல் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது

### விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்** புள்ளிவழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | .................................... பெயர் .................................... ஒப்பம் |
| **இரண்டாவது பரீட்சகர்** முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன். | .................................... பெயர் .................................... ஒப்பம் |
| **மதிப்பீட்டுப்புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்** மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன் | .................................... பெயர் .................................... ஒப்பம் |
| அதிபர் மேற்பார்வை செய்தேன் | .................................... |
| வலய/மாகாண மேற்பார்வையாளர் | .................................... |

(பக்.2 ஐப் பார்க்க)

LMDMunit

1. பந்தியை நன்றாக வாசிக்குக

இராமபிரான் பயணத்தைத் தொடர்ந்த போது வழியில் யமுனா நதியைக் கண்டார். அப்புண்ணிய நதியில் சீதை மற்றும் இலட்சுமணருடன் நீராடினார். அங்குள்ள காய் கனிகளை உண்டு மூவரும் பசியாறினர். நதியின் அக்கரையில் மூங்கில்களைக் கொண்டு ஓலைகளைப் பரப்பி ஒரு பர்ணசாலையை இலட்சுமணர் அழகாக அமைத்தார். தம்பி தன்மேல் வைத்துள்ள அன்பினையும் தொண்டினையும் கண்டு இராமர் வியப்புற்றார்.

கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக

i. இராமன், சீதை ஆகியோர் எந்த நதியில் நீராடினார்கள்?

.......................................................................................................................................................

ii. இலை, தழை கொண்டு வேயப்பட்ட குடிசையினைக் குறிக்கும் சொல்லை எழுதுக?

.......................................................................................................................................................

iii. இணைமொழி ஒன்றை எழுதுக?

.......................................................................................................................................................

iv. மூவரும் எவற்றினை உண்டு பசியாறினார்கள்?

.......................................................................................................................................................

v. சினைப்பெயர் ஒன்றை எழுதுக?

.......................................................................................................................................................

vi. ஆற்றில் என்பதன் ஒத்த சொல்லை எழுதுக?

.......................................................................................................................................................

(6x1=6 புள்ளிகள்)

2. ஒருமை இறந்தகால தன்மை வினைச் சொல்லைத் தெரிவு செய்து அதன்கீழ் கோடிடுக

(1) படித்தான் (2) வாசித்தேன் (3) வந்தோம்

(1x1=1 புள்ளிகள்)

3. பொருத்தமான நிறுத்தக் குறியினை இடுக

i. வெள்ளாடு ஏன் ஏமாற்றம் அடைந்தது

ii. ஆயிரக்கணக்கான வீடுகள் சூறாவளியால் தரைமட்டமாகிவிட்டன (2x1=2 புள்ளிகள்)

4. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன்கீழ் கோடிடுக

i. பூனை தனது எல்லாக்குட்டிகளையும் தூக்கிச்.................................(சென்றது, சென்றன)

ii. மரத்தில் நிறையப் பழங்கள் ................................. (காணப்பட்டது, காணப்பட்டன)

iii. பார்வையாளர் கூட்டம் மெதுவாகக் கலையத் ..................(தொடங்கியது,தொடங்கின)

iv. முதியவரின் தாகமும் களைப்பும் ................................. (நீங்கியது, நீங்கின)

v. அது பழங்கள் .................................... (தின்றது / தின்றன) (5x1= 5புள்ளிகள்)

5. அட்டவணையைப் பூர்த்தி செய்க

| பிராணிகள் | ஆண்மரபு | பெண்மரபு |
|---|---|---|
| i. குதிரை | குண்டு | ...................... |
| ii. மான் | ......................... | பிணை |

(2x1= 2புள்ளிகள்)

சுட்டெண்:..........................................................................................

6. சரியான விடையினைத் தெரிவு செய்க

i. உயர்திணை பெண்பால் வினைச்சொல் எது?

(1) அம்மா (2) சமைத்தார்கள் (3) ஓடினாள்

ii. தட்டிக்கொடுத்தல் என்ற மரபுத்தொடரின் கருத்து

(1) உயர்ச்சியடைதல் (2) உற்சாகப்படுத்துதல் (3) வெற்றியடைதல்

iii. குதிரைகள் கட்டும் இடம்

(1) லாயம் (2) பந்தி (3) தொழுவம்

iv. சோடிச் சொற்களுக்குரிய பொருத்தமான உருவை வரைக என்பது

(1) அறிவித்தல் (2) அறிவுறுத்தல் (3) கட்டளை

(4x1=4 புள்ளிகள்)

7. பின்வரும் நிகழ்கால வாக்கியத்தை இறந்தகால வாக்கியமாக மாற்றி எழுதுக

முயல் காட்டை நோக்கி வேகமாக ஓடுகின்றது

..........................................................................................................................

(1x1=1 புள்ளிகள்)

8. பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக

i. மகாபாரதத்தில் நன்றிக்காக தன்னை அர்ப்பணம் செய்தவன் ........................................... ஆவான் (கர்ணன் / கும்பகர்ணன்)

ii. நூலுக்கு இன்னொருவரால் வழங்கப்படும் உரை ................................................ (பதிப்புரை / அணிந்துரை)

iii. கீரியும் பாம்பும் போல என்பது ............................................................................................ (உவமைத்தொடர், மரபுத்தொடர்)


iv. வயலில் பெண்கள் ........................................... பிடுங்கினர் (கலை / களை)


(4x1=4 புள்ளிகள்)

9. பழமொழியைப் பூர்த்தி செய்க்

இக்கரை மாட்டுக்கு ........................................................................... (1x1=1 புள்ளிகள்)

10. ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லைத் தரப்பட்ட வெற்றிடத்தில் ஆங்கில எழுத்துக்களில் எழுதுக

i.  ..........................................

ii.  ..........................................

(2x1=2 புள்ளிகள்)

11. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்களாக்கி எழுதுக

i. to / canteen / the / am / I / going ...........................................................................................

ii. What / you / ? / like / do ...........................................................................................

(2x1=2 புள்ளிகள்)

12. ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய தமிழ்ச் சொல்லை எழுதுக

i. Grand-son - ...........................................................................................

ii. Healthy food - ........................................................................................... (2x1=2 புள்ளிகள்)

13. பின்வரும் சிங்களச் சொல்லின் கருத்தை தமிழில் எழுதுக (1x1=1 புள்ளிகள்)

தும்ரியஸ்தானய - ...........................................................................................

14. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினை தமிழில் எழுதுக

கமலன் பந்து எங்கே? - ...........................................................................................

(1x1=1 புள்ளிகள்)

LMDMUnit

## தரப்பட்ட வெற்றிடங்களில் விடைகளை எழுதுக

15. ஆறாயிரத்து முப்பத்தாறு என்ற எண்ணை இலக்கததில் எழுதுக

.............................................................................................................................


16. | 3    5    8 |

அடைப்புக்குள் உள்ள எல்லா இலக்கங்களையும் கொண்டு ஒன்றினிடம், நூறினிடம் ஆகிய இடங்கள் இரண்டிலும் 5ஐப் பயன்படுத்தி நான்கு இலக்கங்கள் கொண்ட ஓர் எண்ணை எழுதுக

.........................................................................

17. எண்கோலத்தில் வெற்றிடங்களில் வரவேண்டிய எண்களை எழுதுக


.............., ..............., 13, 16, 20, 25




18. எண்சட்டத்தில் நூறினிடம் குறிக்கும் பெறுமானம் யாது?

.......................................................

19. உருவில் நிழற்றிய பகுதி நான்கில் எத்தனை பங்கு ஆகும்?



......................................................

20. ஒரு கடையில் விற்பனையாகிய பத்திரிகைகள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| | தினக்குரல் | வீரகேசரி |
|---|---|---|
| ஜனவரி | 1548 | 1340 |
| பெப்ரவரி | 1040 | 860 |

i. ஜனவரி மாதத்தில் விற்பனை செய்யப்பட்ட மொத்தப் பத்திரிகைகளின் எண்ணிக்கை யாது?

...................................................

ii. ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் விற்பனை செய்யப்பட்ட பத்திரிகைகளுக்கிடையிலான வித்தியாசம் யாது?

...................................................

21. 205 ஐ 6 இனால் பெருக்கும் போது வரும் விடை யாது? .........................................

22. ஒரு பாத்திரம் கொள்ளத்தக்க ஆகக்கூடிய நீரின் அளவு 4 லீற்றர் ஆகும். அதில் 850 மில்லிலீற்றர் நீர் உள்ளது. அந்தப் பாத்திரத்தை முழுமையாக நிரப்புவதற்கு மேலும் எவ்வளவு நீர் தேவை?


....................................................................

23. 525 புத்தகங்கள் 5 பெட்டிகளில் சமனாக வைக்கப்பட்டுள்ளன. ஒரு பெட்டியில் உள்ள புத்தகங்களின் எண்ணிக்கை யாது?

...................................................................

24. உருவில் உள்ள மான்களின் எண்ணிக்கையை உரோம எண்குறியில் எழுதுக


...................................................................




25. ரூபாய் 45.50 இற்கு பிஸ்கற் பை ஒன்றையும் ரூபாய் 70.00 வீதம் மூன்று அப்பியாசக் கொப்பிகளையும் விலைக்கு வாங்கிய ஒருவர் அதற்காகச் செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு?

..........................................................................................................

26. கீழே சில நகரங்களுக்கான நீளங்கள் தரப்பட்டுள்ளன அதனைக் கொண்டு அட்டவணையைப் பூர்த்தி செய்க




| இருந்து | வரை | தூரம் |
|---|---|---|
| A | C | 180km |
| B | C | 65km |
| B | D | 145km |
| A | D | ............. |

27. 


உருவில் உள்ள பிராணிகளில் $\frac{3}{4}$ எத்தனை பிராணிகளாகும்?

..................................

28. 3kg 750g கொண்ட பருப்பினை 250g கொண்ட எத்தனை பைகளில் இடலாம்?

...............................................

29. பழக்கடை ஒன்றில் மா,பலா,தோடை,அப்பிள்,அன்னாசி போன்ற பழங்கள் 10வீதம் இருந்தன இவற்றில் சில பழங்கள் விற்கப்பட்ட பின்னர் எஞ்சியிருந்த பழங்களை உரு காட்டுகிறது




i. கூடுதலாக விற்பனை செய்யப்பட்ட பழம் எது?

...........................................................

ii. தோடையைவிட அன்னாசி எத்தனை குறைவாக விற்பனை செய்யப்பட்டன?

...........................................................

(15x2=30 புள்ளிகள்)

**30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாக்களுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன்கீழ் கோடிடுக**

30. மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டின் முதலாவதாகவும் இறுதியாகவும் உள்ள செயற்பாடுகள் முறையே
    (1) உடலைத் தளர்த்துதல், பிரார்த்தனை    (2) மனதைத்தளர்த்துதல், மலர்வு
    (3) உடலைத் தளர்த்துதல், உதிப்பு

31. சூழலிலுள்ள குப்பைகூளங்களை உரியவாறு அகற்றும் நடவடிக்கைகளை சிறப்பாக நடைமுறைப்படுத்தும் நிறுவனம்
    (1) பிரதேச செயலகம்    (2) நகரசபை    (3) மாவட்டச் செயலகம்

32. தலதா மாளிகையின் தியவடனநிலமே ஆகப் பதவி வகித்த தேசிய வீரர் யார்?
    (1) மொனராவல கப்பெட்டிப்பொல திசாவை    (2) வண.எஸ். மஹிந்த
    (3) கொங்காலே கொட பண்டா

33. ஒரே வடிவமுள்ள தாவர இலைகளைக் கொண்ட தாவரச் சோடி
    (1) தேசி, செவ்வரத்தை    (2) அகத்தி, வேம்பு    (3) வெண்டி, ஆமணக்கு

34. ஒருவருக்கு தீப்புண் ஏற்படும் பட்சத்தில் அதனைக் குணமாக்க கிராமப்புறமக்கள் பயன்படுத்துவது
    (1) மஞ்சள்    (2) கற்றாளை    (3) கண்டங்கத்தரி

35. பயிர்ச்செய்கைக்கு தீங்கு ஏற்படுத்தாத விலங்கினம்
    (1) நத்தை    (2) கிளி    (3) செண்பகம்

36. குட்டியைச் சுமந்து செல்வதற்கு வயிற்றுப்பகுதியில் பை போன்ற அமைப்புடைய பிராணி எது?
    (1) குரங்கு    (2) நாரை    (3) கங்காரு

37. மக்கள் ஆரம்பகால உபகரணங்களைவிட தற்கால உபகரணங்களை அதிகம் விரும்பக் காரணம்
    (1) விலை குறைவு    (2) பாரம்மிக்கவையாக இருத்தல்
    (3) விரைவாக வேலையைச் செய்யலாம்

38. நாம் குறைந்த கட்டணத்தில் பெறும் சேவை
    (1) மின்சாரம்    (2) கல்வி    (3) சுகாதாரம்

39. குளம் ஒன்றைக் குறித்துக் காட்டுவதற்கு இலங்கைதேசப்படத்தில் பயன்படுத்தப்படுவது
    (1) நீலநிற நீண்ட கோடு
    (2) நீலநிறக்கோட்டின் மீது இடப்பட்ட புள்ளி
    (3) நீல நிறத்தில் நிறந்தீட்டப்பட்டுள்ள சிறிய பிரதேசம்


40. பின்வருவனவற்றுள் சட்டவிரோதச் செயல் அல்லாதது
    (1) போதைப்பொருள் வியாபாரம்    (2) சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல்
    (3) பேருந்தில் உணவுப்பொருட்களை விற்பனை செய்தல்

41. உடல்வளர்ச்சியில் கூடிய பங்களிப்புச் செய்யும் உணவுப்பொருட்களின் கூட்டம்
    (1) தோடம்பழம், ஆம்பழம், அன்னாசிப்பழம்    (2) சோறு, சீனி, பாசிப்பயறு
    (3) பருப்பு, பாசிப்பயறு, சோயாஅவரை

42. விலங்குகளால் பரவலடையும் வித்துக்களை மாத்திரம் கொண்ட விடை
   (1) எருக்கலை, இறப்பர்
   (2) வேங்கை, காசித்தும்பை
   (3) நாயுருவி, புலிநகம்

43. நமது நாட்டிற்குரிய பறவை இனங்கள்
   (1) கொக்கு, செண்பகம் (2) கோழி, மயில் (3) நரைப்புளுணி, காட்டுக்கோழி

44. இலங்கை மின்சார சபையைக் குறிக்கும் குறியீடு
   (1) 

   (2) 
   (3) 

45. முற்காலத்தில் எமது வீடுகளில் பயன்படுத்தப்பட்ட பொருட்களைக் கொண்ட சரியான கூட்டம்
   (1) மின்விசிறி, குளிர்சாதனப்பெட்டி
   (2) அம்மியும் குளவியும், ஆட்டுக்கல்
   (3) மரம்அரியும் இயந்திரம், நுளம்புச்சுருள்

46. உணவுப்பொருள் ஒன்று நஞ்சாகக்கூடிய சந்தர்ப்பமாக இருக்க முடியாதது
   (1) அலுமினியப் பாத்திரத்தில் சமைத்த உணவுக்குப் புளி சேர்த்தல்
   (2) மரவள்ளிக்கிழங்கை மூடிவைத்துச் சமைத்தல்
   (3) கீரைகளைக் குறைந்த நேரம் சமைத்தல்

47. இலங்கையின் பிரதான நெடுஞ்சாலையைக் குறிப்பது
   (1) A வகைப் பாதை (2) B வகைப் பாதை (3) C வகைப் பாதை


48. இலங்கையில் உள்ள வீதிகளின் திருத்த வேலைகள், புதிய வீதிகளை அமைத்தல் போன்றவற்றை மேற்கொள்ளும் நிறுவனம் எது?
   (1) இலங்கை போக்குவரத்துச் சபை
   (2) பிரதேச சபை
   (3) வீதி அபிவிருத்தி அதிகார சபை

49. குறைவான சூரியஒளியில் வளரும் தாவரம் ஒன்றின் தன்மை
   (1) செழித்து வளர்ந்திருக்கும்
   (2) அதிகளவு காய்கள் காய்த்திருக்கும்
   (3) தாவர இலைகள் வெளிறி மஞ்சள் நிறத்துடன் காணப்படும்

50. நாதஸ்வரம் ஒரு
   (1) தோற்கருவியாகும் (2) துளைகருவியாகும் (3) நரம்புக்கருவியாகும்

51. ஒரே மாகாணத்தில் இரு பிரதான ஆறுகள் கடலுக்குள்ளே பாய்கின்றன அவை எவை?
   (1) களனி கங்கை, களுகங்கை
   (2) மகாவலி கங்கை, வளவைகங்கை
   (3) ஜின்கங்கை, களுகங்கை

LMDUnit

50. 

இவ் அமைப்பின் பெயர்
(1) தொலைகாட்டி
(2) ஊசித்துளைக்கமரா
(3) காற்றுத்திசைகாட்டி

51. தேசியக்கொடியில் இரக்கம், காருண்யம், திருப்தி, பற்றின்மை ஆகிய பண்புகள் குறிப்பது
(1) நான்கு இனத்தவர்களை (2) நான்கு மதத்தவர்களை (3) நான்கு அரசமிலைகளைள்

52. இலங்கையின் மலைகளும் காரீயமும் என்ற நூலாக்கத்தை வெளியிட்டவர்
(1)  (2)  (3) 

53. மாணவர்கள் நேரசூசிப்படி செய்யும் வேலையாக இருக்க முடியாதது
(1) பாடசாலைக்குச் செல்லுதல் (2) நித்திரை விட்டெழுதல் (3) நீர் குடித்தல்

54. காற்றின் வேகத்தை அளவிடும் கருவி
(1) காற்றுத்திசைகாட்டி (2) காற்றுவேகமானி (3) திசைகாட்டி

55. பச்சைநிற குப்பைத் தொட்டியினுள் எவ்வாறான கழிவுகள் இடப்படும்
(1) கடதாசிக்குப்பைகள் (2) பொலித்தீன் (3) உண்ட உணவின் மீதிகள்

56. பண்டையகால போர் வெற்றியின் போது இசைக்கப்படும் கருவி
(1) சங்கு (2) தம்பட்டம் (3) கொம்பு

57. ஸ்கேவி, காயங்கள் ஆறுவது தாமதமாதல் போன்ற நோய்கள் வரக்காரணம்
(1) விற்றமின்A குறைவினால் (2) விற்றமின்D குறைவினால் (3) விற்றமின்C குறைவினால்

58. வடக்கு, சப்ரகமுவ என்பன இலங்கையின்
(1) மாவட்டங்களாகும் (2) நகரங்களாகும் (3) மாகாணங்களாகும்

59. கரப்பந்தாட்டப் போட்டியில் ஒரு குழுவில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை
(1) 11 (2) 7 (3) 6

(30x1=30 புள்ளிகள்)

60. **கிராமிய விளையாட்டுக்கள்** பற்றி கருத்துள்ள மூன்று வாக்கியங்கள் எழுதுக
(ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

✷ ................................................................................................................................
................................................................................................................................
✷ ................................................................................................................................
................................................................................................................................
✷ ................................................................................................................................
................................................................................................................................

(3x2=6 புள்ளிகள்)



LMDMUnit